# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 98/ந/2017

ஆணை எண். 205/2017

நாள் : 22/08/2017

திரு எம். இராஜசேகரன்,
பொத்தனூர் – 638 787.
நாமக்கல். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல். – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், பொத்துனூர் கிராமம் 27/8 கிழக்குத் தெரு முகவரியில் வசிக்கும் திரு மா. இராஜசேகரன் அவர்களது 10.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.04.2017 அன்று பெறப்பட்டு 98/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக, நாமக்கல் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெற்றும், அவரிடம் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பெறப்பட்டும் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாமக்கல் மாவட்டம், பொத்துனூர் கிராமம் 27/8 கிழக்குத் தெரு முகவரியில் வசிக்கும் திரு மா. இராஜசேகரன் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சில தகவல்களைப் பெற்று நாமக்கல் நகராட்சிப் பகுதியில் செயல்பட்டு வரும் தங்கம் மருத்துவமனை குறித்து, கீழ்க்காணும் முறைகேடுகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கையினை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(i) அனுமதி பெறாமல் கட்டப்பட்ட தங்கம் மருத்துவமனைக் கட்டடம் நகராட்சி எல்லைப் பகுதியில் இருக்கலாகாது ;

(ii) 2005–ஆம் ஆண்டு தேசிய கட்டட விதித் தொகுப்பிற்கு உட்பட்டு கட்டப்படாத மேற்குறிப்பிட்ட மருத்துவமனை பொதுமக்களுக்கு பாதுகாப்பு அற்றதாக உள்ளது ;

(iii) அனுமதிபற்ற மேற்படி மருத்துவமனை செயல்படுவதற்கு காரணமான நாமக்கல் நகராட்சி ஆணையர் மீது 1860–ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்ட விதித் தொகுப்பின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதுடன் ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும் .

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு, 19.07.2017 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. பொதுமக்கள் நலனுக்காக சமூகப் பணியில் ஈடுபட்டுள்ள முறையீட்டு மனுதாரர், இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணையினை ஏற்று விசாரணைக்கு வருகை தரவில்லை. விசாரணைக்கு வர இயலாத நிலைகுறித்து தொலைபேசி வாயிலாகவோ அல்லது கடிதம் வாயிலாகவோ உரியத் தகவலை தெரிவிக்கவும் முறையீட்டு மனுதாரர் தவறியுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் குற்றச் சாட்டுகள் தன்மை குறித்து, நகராட்சி ஆணையரின் அறிக்கை பெற்றதுடன் அவரிடம் நேரடி விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது. 29.06.2017 நாளிட்ட தனது அறிக்கையில் தங்கம் மருத்துவமனைக் கட்டடத்திற்கு நகர் ஊரமைப்புத் துறை இயக்குநரிடம் கட்டிட உரிமை பெறவில்லை எனினும், 24.09.1984 நாளிட்ட கட்டிட உரிமம் எண்.47/84/ஜி1–ல் மருத்துவமனைக் கட்டிடம் மற்றும் மருத்துவ விடுதி கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் அனுமதியில்லாமல் கூடுதலாக கட்டியுள்ள கட்டடத்திற்கு, மருத்துவமனை உரிமையாளர் மீது வழக்கு தொடரப்பட்டு எஸ்.டி.சி1969/2016 எண்ணிட்ட வழக்கு மூலமாக அபராதத் தொகையினையும் செலுத்தியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். மேலும், மருத்துவமனை அமைந்துள்ள பகுதி, பொது உபயோகப் பயன்பாட்டிற்கென மாற்றி வகைப்படுத்தப்பட்டு, 5875.45 சதுர மீட்டர் பரப்பளவில் தங்கம் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைக் கட்டடம் கட்ட தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்காக சம்பந்தப்பட்ட துணை இயக்குநர் மூலமாக சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். நகராட்சி ஆணையர் 19.07.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வருகை தந்து, தனது அறிக்கையில் அளித்துள்ள கூற்றினையும் உறுதி செய்தார்.

4. கட்டட விதிகள் மற்றும் பிற விதிகளுக்கு முரணாக செயல்பட்டு வரும் மருத்துவமனைகளைக் கண்டறிந்து, அவற்றின் முறைகேடுகளையும் அம்முறைகேடுகளுக்கு உறுதுணையாக உள்ள உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளில் பணியாற்றும் அலுவலர்கள் குறித்தும் இம்முறைமன்றத்தின் நடவடிக்கைக்கு உட்படுத்தும் முறையீட்டு மனுதாரரின் பொது நலன் குறித்த சேவை விரும்பத்தக்கது எனினும், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு எண்.8–ன் கீழ் இம்முறைமன்ற நடுவம் பிறப்பிக்கும் அழைப்பாணைகளை ஏற்று, இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு வருகை தந்து உரிய விளக்கத்தினை அளிக்கத் தவறும் வழக்கத்தினையே கொண்டுள்ளார். சட்ட நடவடிக்கையினை ஏற்கத் தவறும் முறையீட்டு மனுதாரரின் செயலும் ஏற்கத் தக்கதல்ல. இந்நேர்வு சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்கு 1984–ஆம் ஆண்டிலேயே உள்ளாட்சி அமைப்பினால் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியின்றி கூடுதலாக கட்டப்பட்ட கட்டடத்திற்கும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அபராதம்

விதிக்கப்பட்டுள்ளது. எனவே, நாமக்கல் நகராட்சி ஆணையர் மீது குற்றவியல் நடவடிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற முறையீட்டு மனுதாரரின் முகாந்திரம் எதுவுமில்லாத கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல எனக் கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 22– ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு எம். இராஜசேகரன்,
27/8, கிழக்குத் தெரு, பொத்தனூர் – 638 787.
நாமக்கல்.

2. நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்